உ

கடவுள் துணை.

கண்ணாட்டிச்சிந்து.

சென்னை-சூளை.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

கண்ணாட்டிச்சிந்து.

வெண்பா.

விண்ணாடரேத்தரிய வேலவன்மேல்வையமிசை
கண்ணாட்டிச்சிந்தாகக் கழறுதற்குத்-தண்ணாருஞ்
சோலைதிகழுந்தணிகை சுந்தரவிநாயகன்பொற்
றாளைவணங்கிச் சாற்றுவாம்.

இந்துவழ்சுந்தரனார் தந்தவொய்யாரன்
கண்ணாட்டிதந்த வொய்யாரன்
செந்தணிகைவாழ்செங்கலவ ராயசெம்பீரன்
கண்ணாட்டி ராயகெம்பீரன் ௧

பச்சைமயிலேறிவரு முச்சிதவேலன்
கண்ணாட்டி உச்சிதவேலன்
இச்சையுடன்போற்றுபவர்க் கீந்திடுஞ்சீலன்
கண்ணாட்டி யீந்திடுஞ்சீலன் ௨

கானக்குறவள்ளிமகிழ் கடம்பணிதோளன்
கண்ணாட்டி கடம்பணிதோளன்
வானவரிடர்தவிர்த்தே வயங்குந்தயாளன்
கண்ணாட்டி வயங்குந்தயாளன் ௩

தெய்வகுஞ்சரிமகிழுஞ் செங்கதிர்வேலன்
கண்ணாட்டி செங்கதிர்வேலன்
சைவமறைபோனெனவுஞ் சாற்றுஞ்சுசிலன்
கண்ணாட்டி சாற்றுஞ்சுசிலன் ௭

ஒன்னலர்வுரமெரித்தோ னுதவியபாலன்
கண்ணாட்டி உதவியபாலன்
தன்னிகரில்லாதகொடுந் தானவர்காலன்
கண்ணாட்டி தானவர்காலன் ௫

ஆணிப்பொன்னிரத்தினமே லாசைக்கிளியே
கண்ணாட்டி ஆசைக்கிளியே
மாணிக்கமேமாங்குயிலே வார்த்தையைக்கேளடி
கண்ணாட்டி வார்த்தையைக்கேளடி ௬

சித்தர்முத்தர்பத்தர்பணி சேவற்கொடியோன்
கண்ணாட்டி சேவற்கொடியோன்
வெற்றிமயிலேறியேகம் வினைகள்தீர்ப்பவன்
கண்ணாட்டி வினைகள்தீர்ப்பவன் ௭

ரஞ்சிதஞ்சேரஞ்சுகமே நங்கையேமானே
கண்ணாட்டி நங்கையேமானே
கொஞ்சுங்கிளியாளேநாமுங் கூடியேபோவோம்
கண்ணாட்டி கூடியேபோவோம் ௮

ரத்தினபுலாக்குகம்மல் முகத்தில்மின்னுதே
    கண்ணாட்டி முகத்தில்மின்னுதே
முத்துமாலைமோகனமுங் கழுத்திற்றுன்னுதே
    கண்ணாட்டி கழுத்திற்றுன்னுதே ௯

தங்கத்தினில்கல்லிழைத்த வங்கிதோடாவாம்
    கண்ணாட்டி வங்கித்தோடாவாம்
சங்கையில்லாமல்கரத்தில் தகதகென்னுவே
    கண்ணாட்டி தகதகென்னுதே ௰

பத்தரைமாற்றுதங்கத்தால் கைவளையலாம்
    கண்ணாட்டி கைவளையலாம்
சித்திரவிசித்திரமொளிர் செம்பொன்மோதிரம்
    கண்ணாட்டி செம்பொன்மோதிரம் ௧௧

கல்லிழைத்தஒட்டியாணம் இடையில்மின்னுதே
    கண்ணாட்டி இடையில்மின்னுதே
பல்லொளிகள்முகத்தைப்போலே பளபளென்குதே
    கண்ணாட்டி பளபளென்குதே ௰௨

பாதமிரண்டில்சதங்கை கீதம்பாடுதே
    கண்ணாட்டி கீதம்பாடுதே
சீதமதிமுகத்தைக்கண்டென் சித்தம்வாடுதே
    கண்ணாட்டி சித்தம்வாடுதே ௰௩

சந்திரகாந்திசரிகைசேலை தளதளென்குதே
கண்ணாட்டி தளதளென்குதே
சுந்திரவடிவழகி சிந்தைசோருதே
கண்ணாட்டி சிந்தைசோருதே ௰௪

நெத்தியில்திலர்தபொட்டு திகதிகென்னுதே
கண்ணாட்டி திகதிகென்னுதே
குத்தினிரவிக்கைபது மெத்தஜொலிக்குதே
கண்ணாட்டி மெத்தஜொலிக்குதே ௰௫

மல்லிகைமுல்லைமுடிக்கு மாங்குயிலாளே
கண்ணாட்டி மாங்குயிலாளே
வல்லிரேகைம்வல்வினைகள் தீர்ந்திடும்பாராய்
கண்ணாட்டி தீர்ந்திடும்பாராய் ௰௬

சதுர்மறைபுகலுமிந்த் சரவணப்பொய்கை
கண்ணாட்டி சரவணப்பொய்கை
விதியின்படியேபதனில் மூழ்குவோம்வாராய்
கண்ணாட்டி மூழ்குவோம்வாருய் ௰௭

வேலவனைச்சேவைசெய்ய வினைகள்தீருமே
கண்ணாட்டி வினைகள்தீருமே
பாலசுப்ரமணியதேவன் பதங்கள்வாய்க்குமே
கண்ணாட்டி பதங்கள்வாய்க்குமே ௰௮

அணியணியாயிருக்குமன்ன சத்திரம்பாரும்
கண்ணாட்டி சத்திரம்பாரும்
பணிமணிகள் விற்குமிந்த பக்குவம்பாரும்
கண்ணாட்டி பக்குவம்பாராய் ௧௯

வேதியர்கள்வேள்விசெய்யுஞ் சாலைகள்பாராய்
கண்ணாட்டி சாலைகள்பாராய்
சீதமதர்பூத்தொளிருஞ் சோலைகள்பாராய்
கண்ணாட்டி சோலைகள்பர்ராய் ௨௰

ஆறுமுகம்பவனிவரும் அற்புதம்பாராய்
கண்ணாட்டி அற்புதம்பாரும்
வீறுசேர்முரசதிரும் விந்தையைத்தேரும்
கண்ணாட்டி விந்தையைத்தேரும் ௨௧

அடியவர்கண்கூட்டமதை அன்னமேபாரும்
கண்ணாட்டி அன்னமேபாரும்
வடிவழகிகடைகளிதோ வயங்குதுசிராய்
கண்ணாட்டி வயங்குதுசிரும் ௨௨

மனதின்படிவேணதெல்லாம் வாங்குவோம்வாரும்
கண்ணாட்டி வாங்குவோம்வாரும்
தனமுலவுங்கருங்குயிலே கவலையேன்கூறும்
கண்ணாட்டி கவலையேன்கூறும் ௨௩

கார்த்திகையின்பெருமையதை கருதப்போகுமோ
கண்ணாட்டி கருதப்போகுமோ
நாற்றிசையோர்போற்றிசெய்யும நன்கதைப்பாராய்
கண்ணாட்டி நன்கதைப்பாராய் ௨௪

அன்பர்கள் துதித்திரங்கும் ஆனந்தம்பாராய்
கண்ணாட்டி ஆனந்தம்பாராய்
இன்மயிலேமணிக்கு ஏகுவோம்வாராய்
கண்ணாட்டி ஏகுவோம்வாராய் ௨௫

பக்தியுடன்கங்காதரன் பாடுந்தமிழுக்கு
கண்ணாட்டி பாடுந்தமிழுக்கு
சித்தமகிழ்ந்தேயருளுஞ் செங்கல்வராயன்
கண்ணாட்டி செங்கல்வராயன் ௨௬

மாமலர்ப்பதங்கள்வாழி மணமறைவாழி
கண்ணாட்.டி மணமறைவாழி
பூமியிலிதைப்பகரும் புண்ணியர்வாழி
கண்ணாட்டி புண்ணியர்வாழி. ௨௭

கண்ணாட்டிச்சிந்து.

முற்றிற்று.